-

**தமிழ்நாடு அரசு**

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை**

**வட்டாட்சியர் அலுவலகம், அரக்கோணம்**

**இராணிப்பேட்டை மாவட்டம்.**

**அறிவிக்கை எண். அ1/2730/2025** **நாள்: 07.07.2025**

இராணிப்பேட்டை மாவட்ட வருவாய் அலகில், அரக்கோணம் வட்டத்தில் காலியாக உள்ள கிராம உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித் தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

அ). விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் : 06.08.2025 மாலை 5.45 மணிக்குள்.

ஆ). எழுதுதல் திறனறித் தேர்வு நாள்: 07.09.2025

இ). நேர்முகத் தேர்வு : 16.09.2025 முதல் 22.09.2025 வரை

| | | | |
|---|---|---|---|
| | பதவியின் பெயர் : | கிராம உதவியாளர் | |
| | சம்பள விகிதம் : | சிறப்பு காலமுறை ஊதியம் – ரூ.11,100 – 35,100/- | |
| | வட்டத்தின் பெயர் : | அரக்கோணம் | |
| வ. எண் | நிரப்பப்படும் கிராமத்தின் பெயர் | காலிப்பணியிடத்தின் எண்ணிக்கை | இனசுழற்சி விவரம் |
| 1. | கீழ்குப்பம் | 1 | MBC/DNC (General) (Non-Priority)<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (பொது) (முன்னுரிமையற்றவர்) |
| 2. | அம்பரிஷிபுரம் | 1 | BC (Other than Backward Class Muslim) (General) (Non-Priority)<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதவர்) (பொது) (முன்னுரிமையற்றவர்) |
| 3. | பெருங்களத்தூர் | 1 | GT (General) (PSTM) (Non-Priority)<br>பொதுப்பிரிவினர் (பொது) (தமிழ்வழிக் கல்வி) (முன்னுரிமையற்றவர்) |
| 4. | அன்வர்திகான்பேட்டை | 1 | SC Arunthathiyar (On Preferential Basis) (General) (Non-Priority)<br>பட்டியல் வகுப்பினர் அருந்ததியர் (பொது) (முன்னுரிமையற்றவர்) |
| 5. | முள்வாய் | 1 | MBC/DNC (General) (Non-Priority)<br>மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (பொது) (முன்னுரிமையற்றவர்) |
| 6. | அசமந்தூர் | 1 | BC (Other than Backward Class Muslim) (Women) (Non-Priority)<br>பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாதவர்) (பெண்கள்) (முன்னுரிமையற்றவர்) |

| | |
|---|---|
| கல்வித் தகுதி | தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு தேர்வில் (10-ஆம் வகுப்பு / SSLC) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு – SSLC – (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்)<br>(குறைந்தபட்ச கல்வித்தகுதி – பத்தாம் வகுப்பு தேர்வு எழுதி தேர்ச்சி அடையவில்லை என்றாலும் விண்ணப்பிக்கலாம்) |
| இதர தகுதி | 1.விண்ணப்பதாரர் அரக்கோணம் வட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.<br>2.தமிழில் பிழையின்றி எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.விண்ணப்பதாரர்கள் அரக்கோணம் வட்டத்தைச் சேர்ந்தவர்களாகவும், அரக்கோணம் வட்டத்தில் நிரந்தரமாக வசித்து வருபவர்களாகவும் இருக்க வேண்டும். காலிப்பணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தை சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அக்கிராம பணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| வயது வரம்பு<br>(01.07.2025 அன்று) | குறைந்தபட்ச வயது – 21 வயது - (அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிகபட்ச வயது -- 32 * வயது - பொதுப்பிரிவினர்கள் (GT/OC/FC)<br>-- 37 *வயது –இதர பிரிவினர்கள் (BC/BC(M)/MBC&DNC /SC/SC(A) /ST)<br>(அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத்(எஸ்) துறை, நாள்:13.09.2021 படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)<br>மாற்றுத்திறனாளிகளுக்கு<br>அதிகபட்ச வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும்<br>முன்னாள் இராணுவத்தினருக்கு<br>48 வயது – இதர வகுப்பினருக்கு<br>53 வயது – பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்/ பட்டியலினத்தவர்/பழங்குடியினர். |
| விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்ப படிவம், தேர்வு முறை குறித்த இதர விவரங்களை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதள முகவரி https://ranipet.nic.in/ மற்றும் சம்பந்தப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். விண்ணப்பத்தினை மேற்காணும் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவண இணைப்புகளுடன் 06.08.2025 மாலை 5.45 மணிக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பப்பட வேண்டும்.<br>**”வருவாய் வட்டாட்சியர்**<br>**வட்டாட்சியர் அலுவலகம்,**<br>**அரக்கோணம் வட்டம்,**<br>**இராணிப்பேட்டை மாவட்டம்.**<br><br>வட்டாட்சியர்<br>அரக்கோணம் |